# ஐப்பசி மாதத்திற்கான இறைவேண்டல் மற்றும் நடுநிலைக்கான கைக்கொடுத்தல்

*"தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் உண்மையாய் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்"* (திருப்பாடல் 145:18)

இறைவன் பரிசுத்தமான இறைவன். ஆவர் கருணைமிக்க இறைவனைப் போன்றே குற்றத்தை தண்டிக்கும் இறைவனுமாவார். மனிதன் பலவீனமானவன் என்பதை நன்கு அறிந்தவர். அதனாலேயே அவரை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் அவர் அருகிலிருக்கிறார். அது போலவே தம்மை நோக்கி உண்மையாய் மன்றாடும் யாவருக்கும் அண்மையிலிருக்கிறார் என்பதைத் திருப்பாடலின் ஆசிரியர் நினைவுபடுத்துகிறார்.

அப்படியாயின் நாம் எமது தனிப்பட்ட தேவைகளுக்காகப் போன்றே அடுத்தவரது தேவைகளுக்காகவும் மன்றாடினால் நடுநிலைவகித்தால் அவர் சந்தேகமின்றி எமக்குப் பதில் தருவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்.

அப்படியாயின் இம்மாதம் முழுவதும் இறைவேண்டலின் ஊழியர்களாகிய நாம் எமது தேவைகளை விட அடுத்தவர்களின் தேவைகளுக்காக வேண்டிட நிரந்தரமும் ஆயத்தமாய் இருப்போம். எனவே இம்மாதம் முழுவதும் இறைவனை நெருங்கிடவும் மற்றும் அவரை நோக்கி மன்றாடாதவர்களுக்காகவும் செபிப்போம்.

"ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள். அவர் அண்மையில் இருக்கும் போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். (எசாயா 55:6)

**முதலாம் வாரம் :- தியான வாசிப்பு : திருப்பாடல் 145: 18-21**

வேண்டுலுக்கான விசேட நோக்கு :-

இறைவனில் நம்பிக்கையற்றவர்களுக்காகவும் அவரை நம்பினாலும் அவரிடம் மன்றாடாதவர்களுக்காகவும் (10 நிமிடம்)

வேறுவேண்டுதல்கள் :-

- சுவாமி அப்பாவிற்காக……
- இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, ஆலோசனைக் குழு உள்ளிட்ட புபுதுவையில் பொறுப்பு வகிக்கும் அனைவருக்காகவும்
- மாதத்தின் முதல் ஞாயிறு நடைபெறும் சங்கமங்களின் குடும்பதினத்திற்காக
- சுபெந்தி சங்கத்திற்காக
- இம்மாதம் செபமாலை மாதமாகையால் எல்லா குடும்பங்களும் செபமாலைக்கு முதலிடம் கொடுத்து எல்லா வீடுகளிலும் தினமும் மாலை செபமாலை செபிப்பதற்கான நடவடிக்கை எடுத்திட முடியுமாவதற்காக
- 27ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் தமிழ் பேசும் மக்களின் தினத்திற்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்…..

**இரண்டாம் வாரம் தியான வாசிப்பு : உரோமர் 8: 31-39**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-

இறைவேண்டல் சேவை மற்றும் இறைவேண்டல் துணையாளர் குழுவிற்காக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்

- ஸ்ரீ பிரசங்சாராமய, தர்மாராமய, பாலக்குடா ரம்யாராமய, புபுது அச்சகம், புபுது ஒலி ஒளி சேவை உள்ளிட்ட புபுதுவையில் ஒழுங்கமைப்பு சேவையில் ஈடுபட்டுள்ள அனைவருக்காகவும்.
- ஐப்பசி மாதம் 14ம் திகதி நடைபெறும் தேசிய குடும்ப ஒன்றுகூடலுக்காக
- வெளிநாடுகளிலுள்ள புபுது சங்கங்களுக்காகவும் இறைவேண்டல் சேவையில் சம்பந்தப்பட்ட அனைவருக்காகவும்
- 27ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் தமிழ் பேசும் மக்களின் தினத்திற்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்……

**மூன்றாம் வாரம் தியான வாசிப்பு உரோமர் 10: 9-17**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு

தற்காலிக நலனுக்காக பல்வேறு தெய்வங்களை நாடிச் செல்லம் கிறிஸ்தவ மக்களின் மனம் திரும்புதலுக்காக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்

- மது போதை வஸ்துகளுக்கு அடிமையாகியுள்ள அனைவருக்காகவும் இந்த வியாபாரம் எமது நாட்டினின்று அகலுமாறும்.
- ஆரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காகவும் வைத்தியர்கள் மற்றம் தாதியர் உதவியாளர் அனைவருக்காகவும்
- 26,27 தினங்களில் பிரசங்சாராமயில் நடைபெறும் உள்மனக்குணமளிப்பு சம்மேளனத்தில் பங்குபெற இருக்கம் அனைவருக்காவும், உபஸ்தான குழுவினருக்காகவும்
- 27ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் தமிழ் பேசும் மக்களின் தினத்திற்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்…..

**நான்காம் வாரம் தியான வாசிப்பு : புனித மத்தேயு 21:12-17**

வேண்டுலுக்கான விசேட நோக்கு

தேசத்திற்காக (20நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்

- குழந்தை பேற்றின் நாளை நெருங்கியுள்ள அனைத்து தாய்மார்களுக்காகவும்

- குழந்தை இல்லாத தம்பதியர்களுக்காகவும்
- ஊனமுற்ற பிள்ளைகளுக்காக
- ஏனைய வேண்டுதல்கள்…..

அவதானத்திற்காக

- வெள்ளிக்கழமைகளை செபநாட்களாகக் கழித்திட மறக்க வேண்டாம்.
- இறைவேண்டல் ஒன்றுகூடலுக்கு முன்னர் புபுது செபமாலை அல்லது சாதாரண செபமாலையில் ஒரு காரணிக்கத்தை உச்சரிக்கவும். (விசேடமாக இம்மாதத்தில்) இறை வேண்டலுக்கு உள்ளாவதற்காக புபுதுவையால் முன்வைத்துள்ளகாரணிகள் சில

01. தூய ஆவியானவரின் வல்லமையால் செபியுங்கள். (உரோமர் 8:26-27, புனித லூக்கா 10:21)
02. நாம் செபிக்க வேண்டியது இறைவனின் விருப்பத்திற்கமையவே (1யோவான் 5:14-15)
03. குறிக்கோளோடு செபியுங்கள் (புனித மத்தேயு 26:17)
04. விசுவாசத்தோடு செபியுங்கள் (புனித மத்தேயு 21:21-22, புனித மாற்கு 11:24)
05. அன்புடன் செபியுங்கள் அதிகமாக அன்பு செய்யுங்கள் அதிகமாக செபியுங்கள் (அவிலா திரேசா)
06. மனமொன்றித்த இரக்கத்துடன் செபியுங்கள் (புனித மத்தேயு 15:32)
07. நாம் நடுநிலைவகிப்பவரின் வேதனைக்கு, பிரச்சனைக்கு ஆழமாக உள்ளாகி செபியுங்கள். அந்தப் பிரச்சனையை தனதாக்கிக் கொண்டு செபியுங்கள்.
08. ஒன்டறுபட்டு செபியுங்கள். (புனித மத்தேயு 18:19, திருத்தூதர் பணி 1:14)
09. அடுத்தவரது சுமையைத் தனது ஆன்மீக சுமையாக்கிக் கொண்டு செபியுங்கள்.
10. அதைரியப்படாமல் உறுதியோடு தொடர்ந்து செபியுங்கள். (புனித லூக்கா 11:5-18)

***‘‘எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்***<br>
***இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்***<br>
***எல்லா சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்’’*** (1தெசலோனிக்கர் 5:17)

இறைவேண்டல் சேவை